மிக அதிகமான கிராமங்களில் போக்குவரத்து வசதி ஏற்படும். அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று பதில் கூறியதற்கு நன்றி கூறி, அதற்கு எவ்வளவு மதிப்பீடு என்பதை அறிவிக்க முடியுமா? எப்பொழுது செயல்படுத்த வேலைகள் துவங்கப்படும் என்பதையும் அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 24 மைல் நீளம் உள்ள இந்தச் சாலை அமைப்பதற்கு ரூ. 60 லட்சம் மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. இன்டென்சிவ் அக்ரிகல்சரல் டெவலப்மெண்டு ப்ரோகிராம்—தீவிர சாகுபடித் திட்டத்தின்—கீழ் இதுபற்றி அரசாங்கத்திற்குச் செயற்குறிப்பு அனுப்பப்பட்டு அரசாங்கத்தின் ஆய்வில் இருந்து வருகிறது.

நாகநதி ஆற்றின் குறுக்கே அணை

*828 வினா.—**திரு. தோப்பூர் திருவேங்கடம் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூர் தாலுக்கா, கனியம்பாடி தொகுதியில் உள்ள நாகநதி ஆற்றில் (கீழரசம்பமடு கிராமத்துக்கு அருகில் உள்ளது) சிறு பாசனத் திட்டத்தின் கீழ் அணை ஒன்று கட்டப்படும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

கோவை நகரில் உள்ள சிறப்பங்காடிகள்.

*829 வினா—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை நகரில் தற்போது சூப்பர் மார்க்கெட்டுகள் எத்தனை உள்ளன?

(இ) அவைகளில் எத்தனை தாழ்த்தப்பட்ட ஆண்/பெண் பணியாளர்கள் உள்ளனர்?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஒன்று.

(இ) ஆண் 6, பெண் இல்லை.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, சூப்பர் மார்க்கெட்டுகள் அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் நடைபெறுகின்றன. சூபர் மார்கெட்களில் அரிசனங்களை 100-க்கு 18 பேர்கள் எடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடுமா? அப்படி எடுக்காவிட்டால் சூபர் மார்கெட்டுக்கு அனுமதி கொடுப்பதற்கு அரசு மறுக்குமா?